உ

சிவமயம்.

திருக்கழுக்குன்றத் தலபுராணச் சுருக்கம்.



T. R. Malaikkolundu Pandaram,
Jayalakshmi Book Depot,
TIRUKALIKUNDRAM.

Price 1. Anna.] 1939. [விலை அணா 1.

பிராம்பாஐயர் ஜாலத்திரட்டு

இந்நூலில் பிராம்பா ஐயர் ஆங்காங்குச் செய்துகாட்டிய ஜாலவித்தைகள் 1500-ம் ஒருங்குசேர்த்து அச்சிட்டிருக்கிறது. இப்புத்தகத்தை ஒருமுறை வாசித்தவுடன் இந்திர தந்திர மகேந்திர வித்தைகள், அற்புதமான ஜாலங்கள்செய்ய உடனே முயலுவார்கள். இதில் விநாயகரை அந்தரத்தில் அழைக்கும் ஜாலம், சபையோர்களுக்கு பந்திசெண்டு, சந்தனம், தாம்பூலம் கொடுக்கும் ஜாலம், பலவிதமான பலகாரங்கள் அழைப்பிக்கும் ஜாலம், ஒரு அறைக்குள் சந்திர சூரியனைக் காண்பிக்கும் ஜாலம், அழகிய ஸ்திரீகளைக் காண்பிக்கும் ஜாலம், வசிய அஞ்சனம், இராஜ வசிய மோடி வித்தை, பேயோட்டும் ஜாலம், இருட்டு வீட்டில் பலவிதமான மிருகங்கள் காட்டும் ஜாலம் இவ்விதம் 1500-ஜாலங்கள் அடங்கி யிருக்கின்றன.

இதன் விலை ரூபா 1 0 0

டெய்லரிங் அண்டு கட்டிங்

ஐரோப்பாவில் தேர்ச்சியடைந்த மிஸ்டர் ராபர்ட்ஸ் துரையவர்களிடம் கற்ற இரகசியங்களை நம் சுதேச தையல் வேலை செய்கிற நண்பர்கள் யாவரும் அறிந்து சுலபமாக அளவெடுத்து துணிகளை வெட்டுவதற்கு அளவுகளைப் பிரித்துக் காண்பிக்கக்கூடிய சில விஷயங்களையும், பலவித கோட்டுகள், ட்ரவுசர்கள், எஸ். பி. கோட், டி. பி. கோட், ஸ்போர்டிங் கோட், செமிடிரஸ் கோட், மிலிடேரி கோட், சிவில் கோட், ஓவர் கோட் நிக்கர் ட்ரவுசர், பிரிசென்ட் ரவுசர், சைடிங் பிரீசெஸ் முதலிய அநேக பிரிவுகளைத் தனித்தனி படங்களுடன் கணக்குகளைப் பிரித்து, T. M. கோவிந்தசாமி முதலியார் அவர்களால் தெளிவாக எழுதப்பட்டு ராயல் சைஸில் உயர்ந்த கிளேஸ் கடிதத்தில் அச்சிடப்பட்டிருக்கிறது.

6-ம் பதிப்பு விலை ரூபா 1 0 0

மலையாளமின்னல் அல்லது பொன்மலைப்புதையல்

இஃது ஓர் சிறந்த நூதனத் துப்பறியும் இனிய நாவல். முதலிலிருந்து கடைசிவரையில் மனம் திடுக்கிடக்கூடிய சம்பவங்களும், மகா மாயச் செயல்களும் திடீரெனத் தோன்றித் திகைக்கச்செய்யும் தீரர்களின் திறமைகளும், கண்ணிமைப் போதில் காட்டும் அரிய காட்சிகளும் விகடகவியின் வேடிக்கையும், கள்ளநோட்டுச் சாலையின் காட்சியும் அந்தரங்க அறையின் அலங்கோலமும், காவல்கிடங்கின் கபட சூழ்ச்சியும், கம்பியில்லாத தந்தி மர்மமும், துப்பறிவோனின் சாமர்த்தியமும் படிப்போருள்ளத்தைப் பரவசப்படுத்துவன.

இதன் விலை அணா 0 12 0

எமது விலாசம்:—எஸ். டி. சாமி அண்டு கம்பெனி,

சூளை போஸ்டு, சென்னை.

உ

திருக்கழுக்குன்றம்
ஸ்ரீ வேதகிரீஸ்வரர் அஷ்டகம்.

1 வ்யோமா நிலாநல ஜலாசல சந்த்ரசூர்ய
சைதன்ய கல்பித சரீர விராஜிதாய!
ருக்வாதி வேதகிரீ ஸ்ருங்க நிகேதநாய
ஸ்ரீ ருத்திரகோடி நிலயாய நமஸிவாய!!

2 கற்பூர சங்கதவ ளாக்ருதி சந்த்ர காந்தா
முக்தாபல ஸ்படிக ஸன்னிப விக்ரஹாய!
கஸ்தூரி குங்கும ஹிமாம் புவிலேபநாய
ஸ்ரீ ருத்ரகோடி நிலயாய நமஸிவாய!!

3 ஸௌந்தர்ய நாயகி முகாம்புஜ பிருங்கபூத
சந்த்ரார்க்க வன்ஹி நிலயாய ஸதாசிவாய!
அணிமாதி தாயகரு ணாம்ருத ஸாகராய
ஸ்ரீ ருத்ரகோடி நிலயாய நமஸிவாய!!

4 கங்கா ஜலாக்ர நிலயாய கலாமயாய
காமாந்தக திருபுரதக்த விலபநாய!
கங்காதராய கருடத்வஜ ஸேவிதாய
ஸ்ரீ ருத்திரகோடி நிலயாய நமஸிவாய!!

5 க்ருதரா நலேந்த்ர நிலயாய கிரீஸ்வராய
தத்வாதி ஸித்த சுர பூஜிதாவந்திதாய!
ஸித்தாதியோக புருஷாய திகம்பராய
ஸ்ரீ ருத்ரகோடி நிலயாய நமஸிவாய!!

6 பஞ்சாக்ஷராய பவசாகர தரணாய
பஞ்சாஸ்ய வர்மவஸநாய பராத் பராய!
பஞ்சாக்ஷராய நிகமசல நாயகாய
ஸ்ரீ ருத்ரகோடி நிலயாய நமஸிவாய!!

7 வேதாந்த முக்ய விபவாய கிரீஸ்வராய
வேதாந்த வேத்ய ஸரஸாய விசக்ஷணாய!
வேதாய வேத தாரகாய விஷாசனாய
ஸ்ரீ ருத்ரகோடி நிலயாய நமஸிவாய!!

8 ஆதார சக்தி குடிலாசந பஞ்சகாய
பிரம் ஹாண்ட கல்பித கலாமய விக்ரஹாய!
ப்ரஸாத ஷோடச கலாமய விஸ்வமூர்த்தே
ஸ்ரீ ருத்ரகோடி நிலயாய நமஸிவாய!!

வேதமலையில் சுவாமியின் பெயர்;—ஸ்ரீ வேதகிரீஸ்வரர். போக சக்தி;—மலை சொக்கநாயகி. தாழக்கோயிலில், சுரகுருவேந்தனால் பிரதிஷ்டை செய்த லிங்கம்;—ஸ்ரீ பக்தவச்சலர். ஞானசக்தி;—ஸ்ரீ திரிபுரசுந்தரி அம்மன் ஸ்தல விருக்ஷம்;—கதலி,

உ

சிவமயம்.

திருக்கழுக்குன்றத் தல புராணச் சுருக்கம்.

வண்டுவனப் பிள்ளையார் துதி.

பூவேழம் போதிகளாம் புரவேழம் பூவழியிற் பொழியும் பைந்தேன், காவேழம் புதமென்னுங் கருவேழம் பரத்திநெடுங் காக்குங் காவற், கோவேழம் பயந்தமுத்தங் கொடுத்தகனிக் கடத்தகனிக் குவையோடப்ப, மாவேழம் படைத்தவண்டு வனவேழம் புரக்கவென்று வணக்கஞ் செய்வாம்.

புராண வரலாறு.

காருடச் சருக்கம்.

அறங் கிளத்தியபி ரானவையைக் கைதொழ
வுறங்கு மக்கடல் விடுத்தூர்ந்த புள்ளினு
மிறங்கியப் புள்ளினத் திறையை மாயவன்
புறங்கடை நிறுத்தியே விரைந்துட் போயினன்.

ஸ்ரீ வேதவியாச மஹாமுனிவரது, பிரதம மாணாக்கரான சூத மஹாமுனிவர் தம் நித்தியானுஷ்டான பூஜைகளை முடித்துக் கொண்டு, ஆசனத்திலமர்ந்தார்.

அப்போது நைமிசாரண்ய வாசிகளான சௌனகாதி ரிஷிகள் தம் நித்தியகடன்களை முடித்துக்கொண்டு, முனிநாதரிடம் வந்து வணங்கி, சுவாமிகளே? தாங்கள் இன்றையதினம் ருத்திரகோடி மகாத்மியம் என்னும் புராணத்தை அருளிச்செய்ய வேண்டுமென வணங்கி, பயபக்தி வினயத்துடன் பணிவாக நின்றனர்: அவர்களைநோக்கி முனிவர் கூறத்தொடங்கினர். கேளுங்கள் சௌனகாதி ரிஷிகளே, புலித்தோலை ஆடையாக தரித்தவனும், கேட்போருக்கு கேட்டவரம் தடையின்றி தரும் தயாள மூர்த்தியுமாகிய பரமன் திருக்கயிலாயத்தில் பார்வதி சமேதராய் இருக்கும்போது அவ்விடம் ஸ்ரீ மகாவிஷ்ணு கருடாழ்வார் மீதினின்றும் இறங்கி, முதற் கோபுர வாயலில் கருடபகவானை நிறுத்தித் திருநந்திதேவர் அனுமதிபெற்று உள்ளேபோய் ஸ்ரீ கைலாயபதியைத் தரிசித்தனர்.

முதற்கோபுர வாயலிலிருந்த கருடன் வழக்கப்படி திருநந்திதேவரைப் பணியாமல் அகங்கரித்திருப்பதை நந்தியம்பெருமானறிந்து கருடதேவரை கோபப் பார்வையாகப் பார்க்க, இரந்துண்பவன் வாகனமான உன்கோபம் எந்தனை யாது செய்யுமென்று கருடபகவான் கூற, இச்சிவநிந்தையைக் கேட்ட நந்தியம் பெருமான் பெருங்கோபங்கொண்டனர். புவனங்களியாவும் அதிர்ந்தன. இனியென்னவிளையுமோ வென்று தேவர் நடுங்கினர்கள். சிவநிந்தையால் கருடன் யாதனுதேகத்தோடு பெருந்துயருருமல், இப்போதே தண்டிக்க வேணுமென்று நந்திதேவர் நினைந்து பெருமூச்சு விட்டனர். நாசிவழியாய் வந்த சுவாசமாகிய பிரசண்ட மாருதமானது கருடதேவரை நூறுயோசனை தூரம் உருட்டிக்கொண்டு போனது. உள்ளே வாங்கும் சுவாசத்தால் நந்திதேவர் நாசிவரையில் உருண்டுருண்டு சரீரம் நெருங்கி பெருந்துயரடைந்து மகாவிஷ்ணுவைக் குறித்துக் கருடன் முறையிட்டனன். விஷ்ணுமூர்த்தியறிந்து கருடனை உபாதிசெய்யாமல் விட்டுவிடும்படி சிவபிரானுடைய அநுமதி பெற்றுவந்து நந்திதேவருக்குத் தெரிவித்தனர். சிவநிந்தை செய்த இத்தேகத்தை வைக்கலாகாதென்று கருடன்மீது மறுபடியுங் கோபிக்க விஷ்ணுதேவர் சிவசந்நிதி யடைந்து கருடனை உபாதி செய்கின்றனரென்று சொல்லச் சிவபெருமான் நந்திதேவரை வரவழைத்து நமது கட்டளைக்கு மேலுங் கோபங் கொள்ளலாமோ வென்று திருவாய்மலர சிவவாக்கியத்தை ஆலோசியாமல் தனக்குக் கோபம் வந்ததைத் திருநந்திதேவர் நினைந்து சரீரம் நடுங்கி அடியேன் தேவரீர்வாக்கியத்தைத்தடுத்த அபசாரத்தை மன்னித்தருள வேண்டுமென்று பிரார்த்தித்தனர். கருடன் பின்பு சிவானுக்கிரகத்தால் சரீரசௌக்கியமடைந்து பகவானுடன்வைகுந்தமடைந்தனன்

வேதகிரிச் சருக்கம்.

ஒருத ணுணை மறுத்த வுருபவங்
கருதி யேங்கு புநந்தி கலங்கலைப்
பெரிது நம்பன் மகிழ்ந்து தன் பேருட்
டிருவி ழிக்கடை வைத்திவை செப்பினன்.

சிவபெருமானது வாக்கியத்தை தடுத்த நந்திதேவர் பரமனைப் பணிந்து அப்பாபம் நீங்க அனுக்கிரகஞ் செய்ய வேண்டுமென பிரார்த்திக்க பரமன்திருவுளமிரங்கி எத்தகையபாபங்களும் நீங்கும்

படியான மண்ணுலகில் நாம் திருக்கோயில் கொண்டெழுந்தருளி யிராநின்ற ஒப்பற்ற தலத்தில் முதன்மைபெற்று விளங்கா நின்றது உருத்திரகோடியெனும் திருத்தலம். தவிரவும் ஓரமயம் வேதங்கள் நம்மை பூசித்து அறங்களுடன் ஒன்று சேர்ந்து நமது திருவடிக் கீழ்நிலைத்திருக்க வேண்டுமென பிரார்த்திக்க அதன்படியே நீங்கள் மண்ணுலகு சென்று உருத்திரகோடி தலத்தில் ஓர் கிரிவடிவமாக நிற்பீர்களானல் நாம் அக்கிரியி னுச்சியில் சிவலிங்க மூர்த்தமாக எழுந்தருளுவோம் அதனல் உங்களுக்கு வேதகிரியெனும் பெயருண் டாம் என்று கட்டளையிட்டனம். அவ்வண்ணமே இருக்கு வேதம் வேராகவும், யசுர்வேதம் மத்தியாகவும், சாமவேதம் முடியாகவும், அதர்வணவேதம் சிகரமாகவும், சந்தையென்பது பொன், வெள்ளி, இரும்பு, செம்பு, ஈயம், வெண்கலம், தரா என்னும் தாதுக்களாக வும், கற்பம், அம்மலைக்குக் குகைளாகவும், மீமாம்சை தாழ்வரை யாகவும், உபநிடதம்விருக்ஷங்களாகவும், நிருத்தம் அருவிகளாக வும், சோதிடம் பலமணிகளாகவும், சிவாகமம் நாற்புரத்திலுமுள்ள சாரல்களாகவும் விளங்குவனவாம். ஸ்தலங்களுக்குள் அது விசேஷ மாகும் என்று நந்திதேவருக்குச் சிவபெருமான் திருவாய் மலர்ந் தருளின.

உருத்திரகோடிச் சருக்கம்.

ஈசன் மாற்றத்தை நந்தி யினிதுகேட்
டாசி கூறி யடிபணிந் தெம்பிரா
னேசை மல்கு முருத்திர கோடியர்
பூசை நின்னைப் புரியொழுங் கேதென்ருன்.

இவ்வாறு கட்டளையிட்ட பரமசிவத்தை நந்தியம் பெருமான் வணங்கி, வேதகிரித்தலத்தில் கோடி ருத்திரர்கள் பூசைசெய்தகார ணத்தையும் அடியேனுக்குத் திருவாய்மலர்ந்தருள வேண்டுமென்று பணிந்து கேட்கப் பரமசிவன் கட்டளையிடுகின்ருர். உலகத்தி னிடத்து அனேக இராக்ஷதர்கள் பரவி துன்பஞ் செய்துக்கொண் டிருந்தார்கள் அவர்களை நாசப்படுத்தும்படி நமது திருமேனியில் கோடி ருத்திரர்களை உண்டாக்கினேம் அவர்கள் நமக்குச் சமான மான வல்லமையுடையவர்கள், அவுணர்களை நாசஞ்செய்து உலகங் களுக்கு க்ஷேமத்தை யுண்டுபண்ணுவீர்களென்று தெரிவித்தோம். அதன்படியே அந்த அசுரர்களைக் கொன்று உலகங்களுக்கு க்ஷேமம் உண்டுபண்ணி அக்கோடி ருத்திரர்களும் பின்பு கயிலாயத்தை

யடைந்து தவஞ்செய்துகொண்டிருந்தனர். அக்காலத்தில் விஷ்ணு தேவர் திருப்பாற்கடல்கடைய மத்தாக மந்த்ரகிரி எடுத்த பாதாள வழியாக அனேக இராட்சதக் கூட்டங்கள் வெளிப்பட்டு உலகங் களில் பரவினதைக்கண்ட தேவர்களும், முனிவர்களும் பயந்து கயிலைக்குவந்து முறையிட்டார்கள். அப்போது நாம் முன் உண் டாக்கின கோடி ருத்திரர்களைப் பார்த்து அசுரர்களால் நேரிடும் துன்பத்தை நிவர்த்தி செய்யுங்களென்று கட்டளையிட்டோம். அக் கோடி ருத்திரர்களும் பணிந்து சுவாமி? இப்போது அவர்கள் பாபகிர்த்தியங்களை செய்தாலும், பூர்வம்விசேஷ புண்ணியங்களைச் செய்து தவம்புரிந்தவர்களாதலால், அவர்களைக் கொல்லும் பாபம் தொடாதபடி அனுக்கிரகஞ் செய்யவேணுமென்று கேட்டார்கள். வேதகிரித் தலத்தில் நம்மை நீங்கள் பூசித்தால் பாபம் நிவர்த்தி யாகுமென்று கட்டளையிட்டோம் அதன்படி இராக்ஷதர்களைத் துவம்ஸஞ்செய்து வேதகிரித் தலத்தையடைந்து பணிந்தார்கள். அவர்களுடைய அன்பிற்குவந்து அவர்கள்முன் கோடிலிங்கமாக உருக்கொண்டோம் அவ்விலிங்கங்களை அவர்கள் அர்ச்சனைசெய்த போது நாம் பிரசன்னமாய் நீங்கள் விரும்பியது யாதென்று வினவ இது முதலாக இத்தலம் ருத்திரகோடித் தலமென்றும், தேவரீ ருக்கு ருத்திரகோடி நாதரென்றும் பெயர் வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டபடி அனுக்கிரகித்து அவர்களை நமது திருமேனி யில் ஐக்கியஞ் செய்துகொண்டோம். அதுமுதல் இத்தலம் † ருத் திரகோடியென்று வழங்குகிறதென்று நந்திதேவருக்குச் சிவபெரு மான் திருவாய் மலர்ந்தருளினர்.

நந்திதவச் சருக்கம்.

அடையாளத்தினு ருத்திரகோடியி னடைகென்ன
வுடையான முற்று முரைத்தருள்செய்ய வுவந்தேத்திப்
படையார் சூலத்தானை வலங்கொடு பணிவோமும்
விடையாம் நந்தியு மத்தலம்நாடினன் விடைகொண்டான்.

நந்தியம்பெருமான் சிவபெருமானிடம் அநுமதி பெற்றுக் கொண்டு கயிலாயத்தைவிட்டு பூலோகம்வந்து வேதகிரித்தலத்தின் சிகரத்தைக்கண்டு மனங்கசிந்துருகி சிரம் வலது அஸ்தம் இடது

† இத்தலம் சங்குதீர்த்தம் அக்கினிபக்கத்திலிருக்கிறது.
சுவாமி பெயர்—ருத்திரகோடீஸ்வரர்.
அம்மன்—அபிராமியம்மாள்.

அஸ்தம் வலதுகன்னம் இடதுகன்னம் முகவாய் வலதுபுஜம் இடது புஜம் என்னும் அஷ்டாங்கங்களும் பூமியிற்படிய நமஸ்கரித்து வேதகிரியைச்சேர்ந்து மேற்குத்திசையில் வேதகிரியின் சாயல் தோற்றும் ஒரு தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து பூசித்து இடைபிங் கலையாகிய இரண்டுவழியை யடைத்து சுழிமுனைநாடி வழியைத் திறந்து அவ்விடத்திற் காணப்படும் கோடிசூர்யப் பிரகாசத்தையுந் தரிசித்து நசவிதநாத ஒலிகளைக்கேட்டு லலாடஸ்தானத்தில் சந்திர மண்டலத்திலிருந்து பெருகுகின்ற அமிர்தத்தை பானஞ்செய்து பிரம்மாநந்த பரவசராய் சிவயோகத்தில் எழுந்தருளியிருந்தனர். இவ்விதமாக நெடுங்காலந் தவஞ்செய்த நந்திதேவர் வைராக்கி யத்தை வெளிப்படுத்தும்படி சிவபெருமான் தேவேந்திரனுக்குக் கட்டளையிட, இந்திரன் திலோத்தமை என்னும் தேவகன்னிகை யைத் தவஞ்செய்யும் திருநந்தி தேவரிடம் அனுப்பினர். அத்தேவ தாசி வேதகிரி தலத்திற்சேர்ந்து இடபருபங்கொண்ட திருநந்தி தேவரைக்கண்டு அதி சவுந்தரிய விசித்திர திருவுருவைப்பார்த்து பெருங்காதல்கொண்டு கிடாரி வடிவமெடுத்து நந்திதேவருடைய தேகத்தை தனது உடம்போடு உரைந்து காம சங்கல்பம் உண்டா கும்படி திலோத்தமைசெய்ய அப்போது நந்திதேவர் யோகத்தி னின்றும் பிரிந்து பெருங்கோபத்தை அடக்கிக் கண்விழித்துப் பார்த்து திலோத்தமையே உனக்கு இந்தக் கிடாரி வடிவம் நிலை பெறக் கடவதென்று சாபங் கொடுத்தனர். திலோத்தமை நடு நடுங்கி சுவாமி அடியேன்செய்த அபராதத்தை மன்னித்தருள வேண்டும் என்று கதறி அழுது திருவடியில்விழ்ந்தாள், நந்திதேவர் மனமிரங்கி கலியுகத்தில் மகாபலிபுரமென்னும் நகரத்திலிருந்து சுரகுருவென்னும் சூரிய வமிசத்தரசன் வனத்தில் வேட்டையாடும் போது மாயிகன் என்னும் பன்றியின்மேல் விடும் பாண சேஷமா னது உன்மேற்படும் நீ இறந்து திவ்விய சரீரத்தோடு சுவர்க்கமடை யக்கடவாயென்று திருவாய்மலர்ந்து முன்போல் யோகத்தில் இருந் தனர். சாபமடைந்த திலோத்தமை பசுவடிவத்தோடு வனத்தில் மேய்ந்து அலைந்து திரிந்துக்கொண்டிருந்தனள். சிவபெருமான் திருநந்திதேவருக்கு அனுக்கிரகஞ் செய்யும்பொருட்டு நந்திதேவர் முன் ஆகாசவீதியில் எழுந்தருளியதைக்கண்ட தேவர்கள் கற்பகப் பூமாரி பெய்தார்கள் நந்திதேவர்கண்விழித்துப் பரமனைப்பணிந்து, தோத்திரஞ்செய்து, ஆநந்தக் கூத்தாடினர் சிவபெருமான் உனக்கு வேண்டியவரம் கேளென்று திருவாய்மலர எவராவது இத்தலத்தில்

வந்து தேவரீரைபூசித்தால் அவர்கள் திருக்கயிலாயபதம் அடையும் படிக்கும் இத்தலத்திற்கு நந்திபுரியென்றும் தேவரீரெழுந்தருளிய வேதகிரிக்கு நந்திகிரியென்றும் நான் ஸ்நானஞ்செய்த தீர்த்தத்திற்கு நந்திதீர்த்தமென்றும் திருநாமம் வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டபடி பரமன் அனுக்கிரகித்தனர். இடபரூபங் கொண்ட நந்தியம்பெருமான் சிவபெருமானைத் தாங்கிக்கொண்டு வேதகிரிக்கெழுந்தருளி பின்னர் திருக்கயிலாயமடைந்தனர்.

மாயீகச் சருக்கம்.

தூயிகை வரைத்துணை யொத்த துணைபுயத்தான்
றீயி கடையிற்க ணிரட்டை சிவத்தலொவ்வான்
மாயீக னெனப்பெயர் புக்கதோர் வாளரக்கன்
யேயிகள் பிணங்க நிணங்க டின்பான்.

மாயீகனென்னும் ஓர் அரக்கன் வேதகிரிச் சாரலுலிள்ள ஓர் பெரிய பன்றியை கொன்று தான் புசிக்கும்பொருட்டு தான் ஒரு காட்டுப்பன்றி வடிவங்கொண்டு அப்பன்றியை கொல்ல முயல இதனை அவ்வேதகிரிச்சாரலில் தவஞ்செய்துக்கொண்டிருந்த மார்க்கண்ட முனிவர்கண்டு மனம்பதைத்து அரக்கனுகிய பன்றியை நோக்கி "ஓ கொடியனே! நீ இச்சாரலிலுள்ள பன்றியைகொல்ல அஞ்சாது பன்றியுருக்கொண்டனை, ஆதலின் பன்றியாகவே திரியக்கடவாயென சபிக்க, உடனே அரக்கன்பயந்து முனிவரை வணங்கி சாபம் நீங்கும்படி அனுக்கிரகம் செய்ய வேண்டுமென வணங்க, முனிவர் அரக்கனது வேண்டுகோளுக்கிரங்கி" நீ இவ்வனத்தில் இவ்வுருவோடு சிலகாலம் திரிந்துகொண்டிருப்பாயாகில், சோழ குலத்தரசனுன மகாபலிபுரத்தையாளும் சுரகுரு வேந்தன் இவ்வனம் நாடிவேட்டையாடும் காலத்தில் வேந்தன்விடும் பாணங்களுடன் ஒன்று உன்மீதுபடும் அக்காலத்து இவ்வுருவு நீங்குமென்றருளி தவநிலை அடைந்தனர்.

கங்காசலச் சருக்கம்.

தார்வி ரித்தெழுஞ் சான்மலி யென்றெரு
பேர் விரித்த பெருந்திரு நாட்டகஞ்
சேர் விருத்த சிரவா வெனுமுனி
பேர் விருப்பி னிருவரை நல்கினன்.

கங்கம்-கழுகு, அசலம்-மலை, கழுகு-பூசிக்கும் மலை.

சான்மலிநாட்டில் கிரேதாயுகத்திலே விருத்தசிரவா வென்கிற மகாமுனிவருடைய நெற்றியில் சண்டன் என்கிற முனிவரும் மார்பில் பிரசண்டன் என்கிற முனிவரும் கழுகுவடிவாக அவதரித்தார்கள். அவர்களைப் பிதா பார்த்துச் சமஸ்த பட்சிகளுக்கும் அதிபதியாவீர்களென்றார். அவர்களதை வெறுத்து வேதகிரிநாதரைப் பூசிக்கவேண்டிய விதிகளைத் தெரிந்து வேதகிரிக்கு வந்து பூசித்து அந்தயுகமுடிவில் பெருமானோடு இரண்டறக்கலந்தனர்.

சம்பாதி சடாயு சரித்திரம்.

தகை சம்பாதியே சடாயு வென்பவர்
நகைமதி நிறத்தவ ரெருவை நாயகர்
மிகையுட னொருவருக் கொருவர் வெவ்வலி
வகையினிற் பெரியமென் றிகலும் வன்மையார்.

இரண்டாவது திரேதாயுகத்தில் சம்பாதி சடாயுவெனும் இரண்டு முனிவர்கள் பூர்வவினையால் கழுகு வடிவமாகப் பிறந்தார்கள். சம்பாதி என்பவர் தம்பியாகிய சடாயுவைப் பார்த்து உன்னிலும் நானே வலிமையுடையே னென்றனர். தம்பி தமயனைப்பார்த்து உன்னிலும் நானே வலிமையுடையே னென்றனர். இவ்வண்ணம் இருவரும் வாதித்துப் பின்பு நாம் இருவரும் சூரியமண்டலத்தை நோக்கிப் பறந்து செல்வோம் யார் முன்னே சூரியமண்டலத்தை யடைகின்றார்களோ அவர்களே பராக்கிரமத்தில் உயர்ந்தவர்களென்று தம்முள் நிச்சயித்து முனி கணங்களைச் சாக்ஷியாகவைத்து மேருபர்வத உன்னத சிகரத்திலிருந்து ஆகாயத்தை நோக்கி இருவரும் ஒரேகாலத்தில் எழும்பி பறந்தார்கள். அதனால் அஞ்சமுனிவர் சபிக்க, அச்சாபத்தைப் பெற்ற கழுகுகள் முனிவரைப் பணிய அஞ்சமுனிவர் கருணைகூர்ந்து இச்சாபம் நீங்க வேதகிரித்தலத்தை யடைந்து பூசிப்பீர்களாக வென்றனர். அதன்படியே கழுகுகள் வேதகிரிதலம் சேர்ந்து பல்லாயிரங்காலம் பரமனை பணிய, அந்த யுக முடிவில் கழுகுகளுக்கு பரமன் தரிசனம்தந்து பழய பலமுண்டாக க்ருபை செய்ய, சம்பாதியை நோக்கி கற்புள்ள சீதையைத் தேடுதற்கு இராமன் விடுகின்ற தூதர்களால் உனக்கு சிறையுண்டாமென அநுக்கிரகஞ்செய்தனர் அத்திருவருளை இருவரும் பெற்றுச் சென்றார்கள்.

சம்புகுத்தன் மாகுத்தன் சரித்திரம்.

சம்பாதி சடாயுவென்பார் தணந்ததற்பின்
துவாபரத் தேதவம் பலகாலஞ்
செம்பாதி யுமைக் களித்தா னுருத்திரகோ
டிக்கிரியிற் செய்து வாழ்வோர்
வெம்பாவங் கடிந்த சம்புகுத்தன் மா
குத்தனென விளம்பும் பேரோர்
பைம்பாலுந் தேனுமுடன் கலந்த தெனமற்
றுடன்பிறந்த பரிவின் மிக்கோர்.

துவாபர யுகத்தில் சம்புகுத்தன் மாகுத்தன் என்னும் முனிவர்கள் வேதகிரியில் தவஞ்செய்தார்கள். தமையனாகிய சம்புகுத்தன் சிவமே பெரிதென்றான். தம்பியாகிய மாகுத்தன் சத்தியே பெரிதென்றான். சிவமே பெரிதென்றவனை சிவபெருமானும் சத்தியே பெரிதென்றவனைத் திரிபுராம்பிகையும் கழுகாகச் சாபங் கொடுக்க அக்காலத்தில் பூசித்து அந்த யுகமுடிவில் பெருமானோடு இரண்டறக் கலந்தனர்.

சம்பு ஆதி சரித்திரம்.

இளவன் முன்னவ னிருவருமருந்தவ மிழைத்த
வளவின் முக்கணுணுவன் துமக்கெமதுரு வளித்தோம்
வளருங் கற்பகமொன் றவ்வெல்லை வைகுமின்வைகிற்
கிளரு முக்தியும்பின் வழங்குது மெனக்கிளந்தான்.

நாலாவது கலியுகாரம்பத்தில் பூடா விருத்தாவென்னும் இரண்டு முனிவர்களும் வேதகிரிதலத்தில் தவஞ்செய்தனர். அத்தவத்திற்கு வேதகிரிப்பெருமான் இரங்கிக் காக்ஷிகொடுத்து நீங்கள் செய்யுந் தவத்துக்கு நாம் மகிழ்ந்தனம் சாரூபபதத்தை இப்போது தருகின்றோம் ஒரு கற்பமட்டும் அச்சரீரத்தோடு திருக்கயிலாத்தில் வாசஞ் செய்வீர்கள். அதன்பின்பு சாயுச்சியத்தைப் பெருவீர்களென்று திருவாய்மலர்ந்தனர். அதைக்கேட்ட இரண்டு முனிவர்களும் இப்போதே சாயுச்சியந் தரவேண்டுமென்றனர். நாம் கட்டளையிட்ட வாக்கியத்தை மறுத்தமையால் நீங்கள் கழுகுவடிங் கொள்வீர்களென்றனர். முனிவர்கள் பயந்து அபராதத்தைப் பொருத்தருள வேண்டுமென்று பிரார்த்திக்க நீங்கள் காசிப ரிஷியினிடத்தில் இரண்டு கழுகுகளாகப் பிறந்து சம்பு ஆதி யென்னும்

பெயர்பூண்டு இவ் வேதகிரிக்கு வந்து கிரியின்மீதுள்ள பாறையில் உங்கள் மூக்கினால் கீறுவீர்கள் அக்கீறல் சுனைவடிவமாகும் அத் தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து பூசைசெய்யுங்கள் கலியுகமுடிவில் முத்தியடைவீர்களென்று திருவாய்மலர்ந்தனர். அப்படியே காசிப முனிவரிடத்தில் கழுகுவடிவமாகப் பிறந்து ‡ சம்பு ஆதியென்னும் பேர்பூண்டு இப்போதுந் தவஞ்செய்துக்கொண்டிருக்கிறார்கள். இவ் வண்ணம் யுகங்கள்தோறும் இரண்டிரண்டுபேர்களாக நான்குயுகத் திற்கும் கழுகு வடிவங்கொண்ட எட்டுமுனிவர்கள் பூசித்தகாரணத் தால் அம்மலைக்குக் கழுகாசலமென்று பெயர் வழங்குகின்றது.

தீர்த்தச் சுருக்கம்.

தொல்லை வானவர் சூழ்கழுக் குன்றத்தி
னெல்லை யாயதன் கீழ்த்திசை யெல்லையின்
வில்லை விண்மிசை வீசுபொன் மாளிகை
மல்லை யென்றொரு மாநக ருண்டரோ.

வேதகிரியின் கீழ்திசையிலுள்ள மகாபலிபுரத்தை யரசாண்ட சுகுருவேந்தன் வேதமலைச்சாரலில்வந்து வேட்டையாடினன். அவ் வரசனுடைய பாணத்தினால் மாயிகனென்னும் பன்றியும் திலோர் த்தமையாகிய பசுவும் வீழ்ந்து, பழய வுருவெய்தி அடிபணிந்து புகழ்ந்து சென்றனர். அவ்வரசனது வேட்டை நாய்களுள் ஓர் நாய் குஷ்டநோய் கொண்டிருந்தது. அது வேதகிரியின் மேலேறி சுனையிலிருந்த தீர்த்தத்தைக் குடித்தபோது தவறிச்சுனைக்குள் வீழ்ந்தது. அத்தீர்த்தத்தின் மகிமையால் குஷ்டம்மாறி சுவர்ன காந்தியடைந்தது. குஷ்டமுள்ள மந்திரி அதைக்கண்டு அந்நாய் போன வழியேபோய்ச் சுனையைப் பார்த்தபோது அத்தீர்த்தம் புழுக்களால் நிறைந்திருப்பது போலத் தோன்றியதனால் மனதில் அருவருத்து வாய்க்குள்ளே தீர்த்தம்புகாமல் ஸ்நானஞ்செய்த னன். ஆகையினால் சரீரமுழுதும் சுவர்ன காந்தியாய் பிரகாசித்து, வாய்மட்டும் வெண்குஷ்டம் மாறாதிருந்தது நான் தீர்த்தத்தை அருவருத்தேனாதலால் வாயில்குஷ்டம் நீங்கவில்லையென்று வாயில்

‡ சம்பு ஆதி என்ற பெயர்பூண்ட பக்ஷிகள் இப்போது பிரதிதினம் பகல் 11-மணிக்கு திருமலையில் பக்ஷி பாரையின்மீது அன்னம் அருந்தி வேதகிரியை வலஞ்செய்து செல்வதைக் காணலாம்.

தீர்த்தத்தைப் பருகினான். ஆதியில் சந்தேகித்தபடியால் வாயிலிருந்த வெண்குஷ்டம் மாறவில்லை. மந்திரி ஆச்சரியங்கொண்டு அரசனிடம் வந்து அந்த அற்புதத்தைத் தெரிவித்தனன். அம்மந்திரியை அன்றுமுதல் முத்துமணி வெள்வாயனென்று யாவரும் சொன்னார்கள். பின்பு அரசன் மகாபலிபுரம் போகும்போது கழுகு வடிவங்கொண்டு பூசிக்கும் முனிவர்கள் தடுத்து வேதகிரி ஸ்தலத்தின் தீர்த்தமகிமையை தெரிவிக்கின்றார்கள். ஆதியில் கங்கை முதலிய நதிகளெல்லாம் சமுத்திர ராஜனிடம் வந்தார்கள். வருணதேவன் கங்கையினிடத்தில் அதிகப்பிரியங் காட்டினான். மற்ற நதிதேவிகள் கண்டு ஊடல்கொண்டன. கங்கை என் மகிமை உங்களுக்குக் கிடைக்குமோ வென்று சொல்ல ஒருவருக்கொருவர் விரோதித்து வாதஞ்செய்வதை சமுத்திர ராஜன் பார்த்து அவர்களை யழைத்துக் கொண்டுபோய் கோதாவரி கோடீச்சுரருக்குத் தெரிவிக்க அக்கடவுள் அந்நதி தேவிகளுடன் உருத்திரகோடி ஸ்தலத்திற்குவந்து அங்குள்ள தீர்த்தங்களில் அவர்களை ஸ்நானஞ் செய்வித்தனர். ஸ்நானஞ் செய்தவுடன் தாங்கள் கொண்ட பொறாமைநீங்க, வேண்டிய வரம்பெற்று தங்கள் தங்களிருப்பிடஞ் சென்றார்கள். வருண தேவனும் வேண்டிய வரம்பெற்றுச் சென்றனன். இத்தலத்தில் அநேக தீர்த்தங்களுண்டு அவைகளில் முக்கியமா யுள்ளது 12-தீர்த்தமாகும். அவையாவன:—திருமலைக்கு கிழக்கே மூவர்கோவிலின் பக்கமுள்ளது. இந்திரதீர்த்தம், அக்கினி பக்கத்திலுள்ளது ருத்திரகோடி தீர்த்தம், மார்க்கண்டேய முனிவர் சிவபூஜைக்காக சங்கம்பிறந்தது, † சங்குதீர்த்தம், நிருதி பக்கத்திலுள்ளது. மெய்ஞ்ஞான தீர்த்தம், வசிஷ்டதீர்த்தம், மேற்கு பக்கத்திலுள்ளது நந்திதீர்த்தம், வருணதீர்த்தம், வாயு பக்கத்திலுள்ளது. அகலிகாதீர்த்தம், வடக்கு பக்கத்திலுள்ளது, அங்கவதீர்த்தம், ஈசான்ய பக்கத்திலுள்ளது. அகஸ்திய தீர்த்தம் வேதகிரியின் பாரையின்மீது எங்கள் மூக்கினாலே உண்டாக்கப்பட்ட சுனை சம்பாதி தீர்த்தம், இந்த தீர்த்தங்களில் ஸ்நாநம் செய்தவர்கள் பாபம் நீங்கிப் பரிசுத்தராவார்கள். ஸ்தலம் சிவபுரமென்றும் தக்ஷிண கயிலாயமென்றும் வழங்கும்.

---

† மார்க்கண்டேய முனிவரது சிவபூஜைக்காக சங்கம்பிறந்த இத்தீர்த்தத்தில் இப்போதும் பிரதி 12-வருஷத்திற் கொருதரம் சங்கு பிறக்கிறது.

தலவிசிட்டச் சுருக்கம்

வேதமுருத் திரர்கோடி நந்தியோ டிந்திரனும்
விழுத்தகு நாராயணனும் பிரமனுமேல் வசுவும்
ஆதவஞ்செய் பரிதிகளு முனிகணமு மெம்மோ
டடுத்தநா லிருகங்க மாயவருமுதலோ
ரேதமுற்ற விருவினையுந் தொலைய வருச்சித்தா
ரிவர்திருப்பே ரிக்கிரியு மிப்புரியுந் தரிக்கு
மோதனுறு மிவையுமன்றிச் சிவபுரந் தென்கயிலை
யொண்கதலி வனந்தரும கோடியுமென் றுரைக்கும்.

கேளும் வேந்தே கழுகு வடிவமாகவந்த முனிவர்கள் பூசித்த படியால் இம்மலையும் இத்தலமும் இவர்கள் நாமதேயந் தரித்தன. தென்கயிலை யென்றும் கதலிவனமென்றும் தர்மகோடி யென்றும் பெயர்களுமுண்டு. சப்தமாதர்கள், ஆறுமுகக் கடவுள், சந்திரன் ‡ இந்திரன், மார்க்கண்டேய முனிவர், அகலிகை, சம்புமுனிவர், சனகர் வருணன் முதலோர்களும் இத்தலத்தில் வந்து வேதகிரீஸ்வரரை வணங்கி தங்கள் தங்கள் குறையை நிறைவேற்றிக் கொண்டனர். ஆதியில் சிவபெருமான் நந்தியெம் பெருமானைப் பார்த்து கயிலாயகிரியின் சிகரங்களில் ஒன்று கொண்டுபோய் மண்ணுலகில் மூன்றிடங்களில் வைப்பாயாகவென கட்டளையிட்டருள, அதன்படி நந்திதேவர் குற்றம் நீங்கிய ஸ்ரீ சைலத்திலொன்றும் திருக்காளத்தியிலொன்றும் மேன்மைவிளங்கும் இவ் வேதகிரி யிலொன்றும் கொண்டுவந்து வைத்துச் சென்றார். ஆகவே இது தென்கயிலை என்றும் இயம்பப்படும். எவ்விதமான பாவம் செய்தவர்களானு லும் இத்தலத்தை தரிசிப்பார்களானால் ஆதவன் முன்னின்ற பனி போற் பறக்குமென்றாலித்தலத்தின் மேன்மையை யாரே விவரிக்க வல்லார். அரசே நீ இத்தலத்தில் முறைப்படி வேதகிரீஸ்வரரை பூசித்து வேதகிரியை வலம்வந்து கோஹத்திநீக்கி மேனெறி தேடிக் கொண்டு செல்கவென திருவாய் மலர்ந்தருளிச் சென்றனர்.

‡ இந்திரன் பூசித்தபடியால் பிரதி 12-வருஷத்திற் கொருதரம் திருமலையில் இடி கோபுரத்துள் விழுகிறது இது இடியபிஷேகமெனப்படும்.

சுரகுருச் சருக்கம்.

உவர்வினை நிலம்புக வொழுகு மாறுமீண்
டிவர்வினைக் கழனிநா டெய்து மாறெனக்
கவர்படு தடத்தினுங் கழுக்குன் றெல்லையிற்
றவருடைத் தடக்கையான் றுனை மீண்டதே.

சுரகுரு வேந்தன் வேதகிரியின் அடி, நடு, முடி, எனு மூன் றிடத்தும் மூன்று சிவலிங்கப் பிரதிஷ்டை செய்து முறைப்படி பூசித்துத் துதித்தான். அரசனது பாதகம் காக வடிவாக பறந்து வேதகிரியின் தென் பாரிசத்தில் வீழ்ந்தது தேவர்கள் பூமாரி பொழிந்தார்கள் முனிவர்கள் ஆசிகூறினார்கள் தேவதுந்துபி முழங் கினது அரசனும் விதிப்படிவணங்க, அவன் பாவங்களும் விலகியது. பின்னர் வேதகிரியைச் சுற்றிலும் நகரமாக்கி சம்பு ஆதி யெனும் கழுகு முனிவரை வணங்கி புகழ்ந்து கொண்டாடி அநேகநாள் இத் தலத்திலேயே தங்கி பின்னர் சிவபெருமான் திருவருள் பெற்று மகாபலிபுரஞ் சென்று அறநெறி வழாதரசு புரிந்து சிவபதமடைந் தனரென நைமிசாரண்ய முனிவர்களுக்கு சூதமுனிவர் கூறினர்.

திருக்கழுக்குன்றத் தலபுராணம் முற்றிற்று.

திருஞான சம்பந்தசுவாமிகள் அருளிச்செய்த

தேவாரப் பதிகங்கள்.

பண் குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

தோடுடையானொருகாதிற்றூயகுழைதாழ
வேடுடையான்றலைகலனாகவிரந்துண்ணு
நாடுடையானள்ளிருளேமநடமாடுங்
காடுடையான்காதல்செய்கோயில்கழுக்குன்றே. 1

கண்ணுதலான்காதல்செய்கோயில்கழுக்குன்றை
நண்ணியசீர்ஞானசம்பந்தன்றமிழ்மாலை
புண்ணியல்பாற்பாடியபத்துமிவைவல்லார்
புண்ணியராய்விண்ணவரோடும்புகுவாரே. 10

திருச்சிற்றம்பலம்.

திருநாவுக்கரசு சுவாமிகள் அருளிச்செய்த

தேவாரப்பதிகங்கள்.

திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்.

மூவிலை வேற்கையானை மூர்த்திதன்னை முதுபிணக்காடுடையானை முதலானானை, யாவினிலைந் துகந்தானை யமரர்கோனை யாலாலமுண்டுகந்த வையன்றன்னைப், பூவினின்மே னான்முகனு மாலும்போற்றப் புணர்வரிய பெருமானைப் புனிதன்றன்னைக், காவலனைக் கழுக்குன்றமமர்ந்தான்றன்னைக் கற்பகத்தைக் கண்ணாரக் கண்டேனானே.

பல்லோடு தலைசடைமே லுடையான்றன்னைப் பாய்புலித்தோ லுடையானைப் பகவன்றன்னைச், சொல்லோடு பொருளனைத்து மானான்றன்னைச் சுடருருவிலென்பறாக் கோலத்தானை, யல்லாத காலனைமுன் றடர்ந்தான்றன்னை யாலின்கீழிருந்தானை யமுதானானைக், கல்லாடை புனைந்தருளுங் கபாலியைக் கற்பகத்தைக் கண்ணாரக் கண்டேனானே.

திருச்சிற்றம்பலம்.

சுந்திரமூர்த்தி சுவாமிகள் அருளிச்செய்த

தேவாரப்பதிகங்கள்.

பண்-நட்ட பாஷை.

திருச்சிற்றம்பலம்.

கொன்றுசெய்தகொடுமையார்பலசொல்லவே
நின்றபாவம் வினைகடாம்பலநீங்கவே
சென்றுசென்றுதொழுமின்றேவர்பிரானிடங்
கன்றினோடுபிடிசூழ்தண்கழுக்குன்றமே. 1

பல்லில்வெள்ளைத்தலையன்றான்பயிலும்மிடங்
கல்லில்வெள்ளையருவித்தண்கழுக்குன்றினை
மல்லின்மல்குதிரடோளூரன்வனப்பினாற்
சொல்லல்சொல்லிதொழுவாரைத்தொழுமின்களே. 10

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள் அருளிச்செய்த

திருவாசகம்.

திருச்சிற்றம்பலம்.

பிணக்கிலாதபெருந்துறைப்பெருமானுனாமங்கள்பேசுவார்க்
கிணக்கிலாததோரின்பமேவருந்துன்பமேதுடைத்தெம்பிரா
னுணக்கிலாததோர்வித்துமேல்விளையாமலென்வினையொத்தபின்
கணக்கிலாத்திருக்கோல நீ வந்துகாட்டினாய் கழுக்குன்றிலே. 1

பிட்டுநேர்படமண்சுமந்தபெருந்துறைப்பெரும்பித்தனே
சட்டநேர்படவந்திலாதசழக்கனே னுனைச்சார்ந்திலேன்
சிட்டனேசிவலோகனே சிறுநாயினுங் கடையாயவெங்
கட்டனேனையுமாட்கொள்வான்வந்துகாட்டினாய்கழுக்குன்றிலே. 2

மலங்கினேன் கண்ணினீரைமாற்றிமலங்கெடுத்தபெருந்துறை
விலங்கினேன்வினைக்கேடனேனினிமேல்விளைவதறிந்திலே
னிலங்குகின்ற நின்சேவடிகளிரண்டும்வைப்பிடமின்றியே
கலங்கினேன் கலங்காமலேவந்து காட்டினாய்கழுக்குன்றிலே. 3

பூணொணாததோரன்புபூண்டுபொருந்திநாடொறும்போற்றவு
நாணொணாததோர்நாணமெய்திநடுக்கடலுளழுந்திநான்
பேணொணாதபெருந்துறைப்பெருந்தோணிபற்றியுகைத்தலுங்
காணொணாத்திருக்கோல நீவந்துகாட்டினாய்கழுக்குன்றிலே. 4

கோலமேனிவராகமேகுணமாம்பெருந்துறைக்கொண்டலே
சீலமேதுமறிந்திலாதவென்சிந்தைவைத்தசிகாமணி
ஞாலமேகரியாகநா னுனைநச்சிநச்சிடவந்திடுங்
காலமேயுனையோத நீவந்துகாட்டினாய்கழுக்குன்றிலே. 5

பேதமில்லாததோர்கற்பளித்தபெருந்துறைப்பெருவெள்ளமே
யேதமேபலபேசநீயெனையேதிலார்முனமென்செய்தாய்
சாதல்சாதல்பொல்லாமையற்ற தனிச்சரண்சரணாமெனக்
காதலாலுனையோதநீவந்து காட்டினாய்கழுக்குன்றிலே. 6

இயக்கிமாரறுபத்துநால்வரையெண்குணஞ்செய்தவீசனே
மயக்கமாயதோர்மும்மலப்பழவல்வினைக்குளழுந்தவுந்
துயக்கறுத்தெனையாண்டுகொண்டுநின்றாய்மலர்க்கழல்தந்தெனைக்
கயக்கவைத்தடியார்முனேவந்துகாட்டினாய்கழுக்குன்றிலே. 7

திருச்சிற்றம்பலம்.

பட்டினத்தடிகள்.

காடோசெடியோ கடற்புறமோ கனமேமிகுந்த
நாடோநகரோ நகர்நடுவோநலமேமிகுந்த
வீடோபுறந்திண்ணையோ தமியேனுடல்வீழுமிடம்
நீடோய்கழுக்குன்றிலீசாவுயிர்த்துணை நின்பதமே.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீ சிதம்பரசுவாமிகள் அருளிச்செய்த
திருவிலிங்கப் பதிகம்.

நேரிசை யாசிரிய விருத்தம்.

அண்டாரகரவென ரிஷிகள் சிவ சிவவென அரவமுடல் நெற நெறெனவும், அணிகங்கை சலசலென நெற்றிவிழிநிகநிகென அவனி கிடு கிடுவெனவெண், அண்டமதி தளதளென வரியுரிச் சட சடென சொரூபவொளி பளபளெனவுந், துவளுமுய லகன்முதுகு மொளமொளெனத் தாளிற் றொடுத்தகிண் கிணியொலிப்பத், தெண்டனிடுமடியவர் சிலம்புகல கலவெனத் தேவதுந்துமி முழங் கத், திகழ்நந்தி மத்தள மடமடென மகிழ்வினெடு தேவர் பூ மழைகள் பொழியக், குண்டலந் தகதகென வரிபிரம ரிஷிமுனிவர் கொண்டாட நடனமாடுங், கொங்கைமத மங்கையொரு பங்கி னுறை யுங்கழுக் குன்றின் மஹாலிங்கமே. 1

மயிலில்வரு ஷண்முகனை யேவியே சூரனிட வன்சிர மறுத்த லிங்கம், வந்துதிரி துந்திய வெலிக்குத் திரிலோகத்தை மனமகிழ வீந்தலிங்கம், கயிலைமலை பதினன்கு லோகத்தை யாண்டிடக் கர்த் தவ்விய மானலிங்கம், கனகமகமேருகிரி வலமாக வந்திடுங் கதிர்மதி கண்ணனலிங்கம், துயிலுமுயர் தவமுடைய ஞானவிழி காணவரு சொர்ப்பன மகாலிங்கமுன், சுரகுரு சக்ரவர்த்திக்கு வெண்குட்டந் தொலைத்திட்ட ஜோதிலிங்கம், குயிலிசை முழக்க மெனச் சங்கீத ரம்பையர்கள் கோடிசதகோடிசூழும், கொங்கைமத மங்கையொரு பங்கினுறையுங்கழுக் குன்றின் மஹாலிங்கமே. 2-3-4-5-6

நித்தமுஞ் சம்பாதிதேவர்வல மாய்வந்து நின்றுதொழு சாக்ஷி லிங்கம், நேசமா யஷ்டவசு யிடிசங்கு தோன்றியே பூஜிக்க நின்ற மனசாக்ஷிலிங்கம், கற்றதமிழ் சுந்தரர் பாடிவரவேயன்று காணு தொளிந்தலிங்கம், கண்டபின் செங்கல்லைப் பொன்னுக்கி யெறி கின்ற கடவுள் பொன்னிட்ட லிங்கம், முற்றத்திலேவந்து தாசி தமிழைக்கேட்டு மோட்சங் கொடுத்தலிங்கம், முப்புரமெரித்திட்ட சிறியாகைபுரிகின்ற மூர்த்தியாம் வேதலிங்கம், குற்றமிக வேசெய்த நாயேனை யடிமையாய்க் கொண்ட வானந்தலிங்கம், கொங்கைமத மங்கையொரு பங்கினுறையுங்கழுக் குன்றின் மஹாலிங்கமே. 7-8-9-10-11.

திருக்கழுக்குன்றம் திருவிலிங்கப்பதிகம் முற்றிற்று.

திருக்கழுக்குன்றம்,

வேதகிரீஸ்வரர்பேரில் மலைமருந்துபாடல்.

கட்டளைக் கலித்துறை.

1 செய்யகமலத்திருவாழ்வளிக்குந்தியங்குமனத்
தையமகற்றுமறிவேகொடுக்குமடர்ந்தபிணி
நையநறுக்குநமனையுருக்குநளிகடல்சூழ்
வையந்துதித்திடும்வேதகிரீ சர்மலைமருந்தே.

2 சூனியம்போக்கும்பகைநீக்கும் வெய்யச்சுரந்தவிர்க்கும்
ஞானமுண்டாக்குமதன் போற்றிகழ்வுநயந்துதவும்
யீனந்தவிர்க்கும்பசாசுகள் பூதத்திடரகற்றும்
வானவர்போற்றிடும்வேதகிரீ சர்மலைமருந்தே.

3 சீர்கண்டகாமாலைத்தலைவலிபல்வலிசீதசுரம்
மூர்க்கம்செயும்விஷம்பீனிசங்காசமுதற்பலநோய்
தீர்க்குஞ்சமன்வலிநீக்கிமண்மேல் வச்ரதேகந்தந்தே
மார்க்கண்டன்போல்வைக்கும்வேதகிரீ சர்மலைமருந்தே.

4 நிரந்தரஞ்செல்வந்தருமொருக்காலுநிலைதளரா
புரந்தரன்மாலயன்விண்ணோரியற்றிய பூசனைக்கு
உரந்தருங்கல்விதருஞ்சிவஞானத்துண்மைதரும்
வரந்தந்தருள்செயும்வேதகிரீ சர்மலைமருந்தே.

5 கருத்தைதந்தெழுத்துன்னிகாலசையாமல்கண்மூக்குநுனி
பொருத்திக்கருப்பைமடமாதர்கோள்மறைபூதரத்தை
யுருத்தியுடனமர்தீவினை போக்கியுறும்பிறவி
வருத்தம்தணித்திடும்வேதகிரீ சர்மலைமருந்தே.

6 ஆதவுந்தீர்த்திடுங்கயிலைனுளும்மருந்நதி
சீதப்புனத்தடத்துள் மூழ்கிநித்தஞ்செயல்முடித்தே
ஓதியெழுத்தைந்தையுமடிவாரத்திலுய்த்துரைப்ப
வாதையறுத்திடும்வேதகிரீசர்மலைமருந்தே.

7 விடந்தீர்க்கும்பல்வினைபோக்கும்வலியவிறல்கொடுக்கும்
கொடுஞ்சூலைவாதகுன்மங்கள்நீக்குங்குலையகற்றும்
மடஞ்சேருமின்னார்கள் வசியமுண்டாக்கும் வரமளிக்குந்
தடஞ்சேர்புயத்தினன் வேதகிரிசர்மலைமருந்தே.

8 பஞ்சமாபாதகந்தீர்க்குமெஞ்ஞான்றுபரிவுடனே
தஞ்சமென்றேநம்பியுண்போர்க்கமுதசஞ்சீவிபொல்லா
வெஞ்சினத்தோர்செயுங்குத்திரஞ்சாய்க்கும்விறல்கொடுக்கும்
வஞ்சகமகற்றிடும்வேதகிரி சர்மலைமருந்தே.

9 கொல்வினைகுட்டங்கொலைநோய்குன்மங்கொலைகொடிய
பல்வினைத்தீயவிடப்பாண்டுநோய்பஞ்சபாதகமும்
தொல்வினையென்றுந்தொலையாவினையுந்தொலைத்தடியேன்
வல்வினைதீர்த்திடும்வேதகிரி சர்மலைமருந்தே.

10 மூலவியாதிபொல்லாப்பாண்டுரோகமுருமூச்சைவலி
சாலவுபாதிக்ஷயரோகமியாவையும் தானடக்கும்
பாலசவுந்தரியோர்பாகன்மூவர்சொல் பாடல்கொள்ளும்
மாலயன்றேடிடும்வேதகிரி சர்மலைமருந்தே.

11 நந்தித்தடஞ்சங்குதீர்த்தம்சம்பாதிமெஞ்ஞானநதி
வந்திக்கில்வாழவருள்வனசொக்கவாரறைநீள்
அந்திபிறையணிவேதகிரி சர்மலைமருந்தைச்
சிந்திக்கில்வினைநீங்கிமெய்ஞ்ஞானமுஞ்சேர்ந்திடுமே.

12 பள்ளிகொள்மாலயனும்வேதனுந்தேடிப்பணிந்துவரும்
தெள்ளியபூங்குழல்பெண்ணினல்லாளொடுசேர்ந்துநிதம்
வள்ளலெனத்தரும்வேதகிரி சர்மலைமருந்தை
அள்ளியுண்டால்நமன்றெண்டனிட்டோடியலறுவனே.

திருச்சிற்றம்பலம்.

அருணகிரிநாதர் திருவாய் மலர்ந்தருளிய

திருப்புகழ்.

ஓலமிட்ட சுரும்பு தனு தனுவென
வேசிரத்தில் விழுங்கை பளீர் பளீரென
வோசை பெற்றசிலம்பு கலீர் கலீரென விரகலீலை

ஓர்மிடற்றி லெழும்புள் குகூ குகூவென
வேர்வை மெத்த வெழுந்து சலா சலாவென
ரோமகுச்சு நிறைந்து சிலீர் சிலீரென அமுதமாரன்

ஆலயத்து ளிருந்து குபீர் குபீரென
வேகுதிக்க வுடம்பு விரீர் விரீரென
ஆரமுத்த மணிந்து அளா அளாவென மருவுமாதர்

ஆசையிற்கை கலந்து சுமா சுமாபவ
சாகரத்தி லழுந்தி எழா எழாதுளம்
ஆறெழுத்தை நினைந்து குகா குகாவென வகைவராதோ

மாலையிட்ட சிரங்கள் செவேல் செவேலென
வேலெழுச்சி தரும்பல் வெளேல் வெளேலென
வாகைபெற்ற புயங்கள்கறேல் கறேலென எதிர்க்கொள்சூரன்

மார்புமொக்க நெரிந்து கரீல் கரீலென
பேய்குதிக்க நிணங்கள் குழூ குழூவென
வாய்புதைத்து விழுந்து ஐயோ ஐயோவென உதரமாறும்

வேலைவற்றி வறண்டு சுறீல் சுறீலென
மாலைவெற்பு மிடிந்து திடீல் திடீலென
மேன்மைபெற்ற ஜனங்கள் ஐயா ஐயாவென விசைகள்கூற

வேலெடுத்து நடந்த திவா கராசல
வேடுவப்பெண் மணந்த புயா சலாதமிழ்
வேதவெற்பி லமர்ந்த க்ருபாகரா சிவ குமரவேளே.

இன்னதிருக் கழுக்குன்றப் புராணத்தை யிசைத்தோர் மற்றிசைமி னென்றோரு, ரன்னசுவை செவிக்கொண்டோர் வரைந்தோரஞ் சகமிற்றோ டலகமீந்தோர், நன்னரருச் சனைபுரிந்தோர் வேதமருச் சித்ததொரு நாதன் பாதத், துன்னருமுத்தியும் பெறுவர் மறுமைமி லிம்மையிற் செல்வத் துவகை கூர்வார்.

பிரதக்ஷிண விதி.

மண்டலப்பிரதக்ஷிணம் செய்வோரும் சாதாரணமாக பிரதக்ஷிணம் செய்வோரும் முக்கியமாக அனுசரிக்கவேண்டிய விதிகள்.

விடியற்காலம் சுமார் 4-மணிக்கு நித்திரை நீக்கி நித்திய கடன்களை முடித்து சங்குதீர்த்தத்தில் விதிப்படி ஸ்நானம் செய்து ஜப தபங்களை முடித்துக்கொண்டு துவைத்துலர்ந்த வஸ்திரமணிந்து மலையடிவாரஞ்சென்று சிந்தாத்திரி கணபதியை வணங்கி முறையே ஆங்காங்குள்ள மூர்த்தங்களை வழிப்பட்டும்,சிவத்தியானத்துடனும் வேதகிரியை வலம் வரவேண்டியது. "அள்ளி உண்டால் நமன் தண்டனிட்டோடி அலருவனே" என்ற வாக்கியப்படி (மலை மருந்தெனும் மிருத்திகை எடுக்கும் இடம், கோடிவிநாயகர் ஆலயத்துக்குத் தென்பாரிசம்) மருந்தை உபயோகப்படுத்திக்கொண்டு அவ்விடமே சிறிது நேரம் தங்கி பின்கிரியை வலம் வரவேண்டியது. மண்டலப் பிரதக்ஷிணம் செய்வோர் காலை மாலை இரண்டு வேளைகளிலும் மேற்படி தீர்த்தத்தில் ஸ்நானஞ் செய்து வேதகிரியை வலம் வரவேண்டியது. அதேபிரகாரம் தாழக்கோயிலில் பக்தவச்சலரையும் தேவி ஸ்ரீ திரிபுரசுந்தரி அம்மனையும், காலை மாலை வலம் வரவேண்டியது. ஒரு மண்டல மென்பது 48-நாள். ஒரு மண்டலம் பிரதக்ஷிணம் செய்வோர் ஸ்ரீ தேவி திரிபுரசுந்தரி ஆலயத்தில் காலமொன்றுக்கு 108-பிரதக்ஷிணம் செய்யவேண்டியது. இதை முறையே ½-மண்டலம், ¼-மண்டலம், செய்வோர் கவனிக்க வேண்டியது. வேதங்களே கிரியா யிருத்தலினால், மலையின்மீது யேறுபவர்கள் விதிப்படி வலம் வரவேண்டும். இதுபடிசெய்து மண்டலம் பூர்த்தியானவுடன் சுவாமி, அம்மன் இவர்களுக்கு அபிஷேகம் செய்வித்து, அர்ச்சனை முதலானவைகள் செய்து அவரவர்கள் சக்தியானுசாரம் சிவனடியார்களுக்கு அமுது செய்வித்தல் வேண்டும். இதன்படி அனைவரும் செய்து ஸ்ரீ திரிபுரசுந்தரியம்பாள் சமேத ஸ்ரீ வேதகிரீஸ்வரர் கிருபையால் இஷ்டகாமியார்த்த பேரின்பங்களை அடைவார்களாக.

ஓம் தத் ஸத்.


ஸ்ரீ பாரதி பிரஸ், சூளை, சென்னை.

ஆங்கிலபோதகன்

தமிழ் எழுத்துக்களைக்கொண்டே இங்கிலீஷ் கற்றுக்கொள்ளலாம்

இதுபோல் இங்கிலீஷ் பாஷையை போதிக்கும்
நூல் வேறே கிடையாது

இதை வாசித்தால் அதிக சுலபத்தில் இங்கிலீஷ் எழுதவும் பேசவும் நன்குய்த் தெரிந்துகொள்ளலாம் இதற்கு உபாத்தியாயர் தேவையில்லை இதில் ஆங்கில எழுத்துகளையும், பதங்களையும் தமிழில் உச்சரிக்கும் விதங்களைக்காட்டி ஆங்கில பாஷையிலுள்ள இரண்டெழுத்துச் சொற்கள் முதல் பல வெழுத்துச் சொற்களையும் விவரித்து அவற்றிற்குச் சரியான தமிழ் உச்சரிப்புக்களையும், தமிழ் அருத்தங்களையும், அவ்வப்பதங்களைக் கொண்ட வாக்கியங்களையும், படிப்படியாக யாவரும் வெகு சுலபமாய்த் தெரிந்துக் கொள்ளும்படி எழுதப்பட்டிருப்பதுடன் மிருகங்கள் பட்சிகள் வீட்டுச்சாமான்கள், உணவுப்பொருள்கள், குடும்ப விவகாரங்கள் வியாபார விஷயங்கள், தேகாரோக்கியம் சரீரக்கூறுகள் உத்தியோக விஷயம், நீதிஸ்தானம் முதலிய அரசாங்க விவகாரங்கள், சிநேக சம்பாஷணைகள், கடிதமெழுதும் முறைகள், கிராமாதிசயங்கள், பட்டண வாழ்க்கை, தொழிற் சம்பந்தமான விஷயங்கள் விண்ணப்பங்கள், கலியாண முதலிய சுப விசேஷங்கள், வியாசங்கள், சிறுகதைகள், உலக அனுபவத்திற்கான சகல விஷயங்களும் சுலபமான நடையில் இங்கிலீஷிலும், தமிழிலும் எழுதப்பட்டிருக்கின்றன.



இந்த ஆங்கிலம் கற்க அவாவுறும் ஆண்மக்களுக்கும் பெண்மக்களுக்கும் மாத்திரமன்றி கிராமாதிகாரிகள், கணக்கப்பிள்ளைகள், தோட்டக் கங்காணிகள், கீழ்த்தர உத்தியோகஸ்தர்கள், இராணுவ சிப்பாய்கள், வியாபாரிகள், ஐரோப்பியரிடமிருக்கும் தொழிலாளர்கள் முதலிய யாவருக்கும் மிகவும் அவசியமானது.

திக்கு கடிதம் காலிகோ பயிண்டு 832-பக்கங்கள் கொண்ட
பெரிய புத்தகம் விலை ரூபா 2 0 0

நமது விலாசம்.—எஸ். டி. சாமி அண்டு கம்பெனி,
சூளை போஸ்டு, சென்னை.